# படி எடிசன் படி.

எங்கப்பா எந்த நேரத்துல, எந்த யோசனையில எடிசன்னு பெயர் வைச்சாரோ, சயின்ஸ், கணக்கு பாடங்கள் என்னைப்பார்த்து பயந்து ஓடுது. நான் புதுசு புதுசா எழுதுற பதில்கள் எல்லாம் தப்புன்னு அறிவியல் சார் சிவப்பு மையால அடிச்சுடுறாரு. நான் சொந்தமா ஆராய்ச்சி பண்ணினாலும் அப்பாவுக்குப் பிடிக்கல.

இங்கிலீஷ் நமக்கு தாய்மொழி இல்ல. தாய் மொழிய எடுத்துக்கிட்டா, சங்க காலத்து நடை நமக்கு ஒத்து வரல. வரலாறு எல்லாம் தெரியுது ஆனா வருஷம் மனசுல நிக்க மாட்டுக்குது, சில ராஜாக்கள் பெயருங்களும் தெரியல. புவியியல்னு எடுத்துக்கிட்டா, ஆப்ரிக்கா அமெரிக்கா, இந்தியா எல்லாவுமே மேல விரிஞ்சு கீழே சுருங்கியிருக்கறது புரியுது. நாடுகள் நகரங்கள் பெயர்கள எல்லாம் அடிக்கடி மாத்திட்டு வேற இருக்காங்களா...இப்படியே என்னோட பலகீனங்களுக்கெல்லாம் காரணங்கள அடுக்கச் சொன்னா பெரிய புத்தகமே எழுதிடலாம்.

ஒரு வழியா அரசாங்கம், ஆசிரியர்கள் தயவால தட்டுத் தடுமாறி பத்தாம் வகுப்பு வந்துட்டேன். இனிமே தட்டவும் முடியாது தடுமாறவும் முடியாது. அப்பா என்னவோ பெட்டிக்கடை, எருமை மாடுன்னு பயமுறுத்திட்டு இருக்கார்.

அப்பா அம்மாவுக்குத் தெரிஞ்சவங்க, எனக்குத் தெரிஞ்சவங்க எங்க எல்லாருக்குமே தெரியாதவங்க அப்படின்னு ரோட்ல வர்ற போற எல்லாரும் இலவச அடுப்பு, இலவச டிவி, மாதிரி இலவச அட்வைஸ் குடுத்துட்டுப் போறாங்க.நிம்மதியா ஊர் சுத்த முடியல எங்க பாத்தாலும் "படி, படி, நல்லாப்படி"ன்னு சுத்திசுத்தி மக்கள் துரத்தித் துரத்தி ஆலோசனை சொல்றாங்க.

எனக்கு அட்வைஸ் பண்றதுக்குன்னே அப்பா ஆனந்த் மாமாவ வரச் சொல்லியிருந்தார். "நீ சொல்றத மட்டும் தான் அவன் கொஞ்சம் காது குடுத்துக் கேட்பான். என் ஆஃபீசுல எனக்குக் கீழ வேல பாக்கறவங்க பிள்ளைங்களுக்கு மெடிக்கல், எஞ் சினியரிங் சீட்டுன்னு வாங்கிக் குடுத்துட்டு எம் பயலுக்கு எரும மாடு பெட்டிக்கடைன்னு தான் பாக்க வேண்டியிருக்குமோன்னு பயமா இருக்கு." செல் ஃபோன் பேச்சு பலமாப் போயிட்டு இருந்தது.

இந்த ஆளு மாதிரி நம்ம அப்பா இருந்தா எவ்ளோ நல்லா இருக்கும்னு சில ஆட்களப்பாத்து மனசுக்குள்ள நினைப்போம் இல்லியா அப்படித்தான் என்னோட ஆனந்த் மாமா. அம்மாவுக்கு தம்பி. கம்ப்யூட்டர் இஞ்சினியரா பெங்களூருல இருக்காரு. ஜாலின்னா ஜாலி, இப்படியும் பெரிய மனுஷங்க இருப்பாங்களான்னு நினைக்கிற மாதிரி ஒரு கேரக்டர் அவரு. எப்பல்லாம் அவரு வீட்டுக்கு வர்றாரோ அப்பல்லாம் நான் ஹட்ச் நாய் மாதிரி அவரு பின்னாலேயே சுத்துவேன், கிரிக்கெட், ஃப்ரெண்ட்ஸ் எல்லாத்துக்கும் ரெண்டு நாள் பந்த் தான்.

பெங்களூருக்கு நான் போயிட்டுத் திரும்பறப்போ எல்லாம் அவர மாதிரி வரணும்னு நினைச்சு ரெண்டு நாளு முட்டி முட்டி. விழுந்து விழுந்து படிப்பேன். என்னத்தப் படிச்சு என்ன பண்றது? எடிசன் 99 வாட்டி தோல்விக்கு அப்புறம் தான் குண்டு பல்பு கண்டுபிடிச்சாராம். இங்க எத்தனை பல்பு எரிஞ்சாலும் வெளிச்சம் வரலியே?

நான் என்னங்க படிக்கக்கூடாதுன்னு முடிவு செஞ்சுட்டா சுத்துறேன்? படிக்கறேன், அம்மாட்ட எழுதிக்காட்டுறேன், ஒப்பிச்சுக்காட்டுறேன். பரிட்சையில எழுதறப்போ மறந்து போயிடுது. 'ஷார்ட் டெர்ம் மெமரி லாஸ்'னு சொல்றாங்களே அது மாதிரி எதுவுமோ என்னவோ தெரியல. சினிமா பாட்டு, சினிமா செய்தி, எல்லாமே நல்லா நினைவுல

இருக்கு. ஏங்க பாடத்தையும் சினிமா, டிவி நிகழ்ச்சி மாதிரி நடத்துனா நல்லா படிக்க முடியுமோ என்னவோ. நான் கல்வி அமைச்சரா வந்தா செய்ய நினைச்சிருக்கிற முக்கிய திட்டங்கள்ல இதுவும் ஒண்ணு.

ஹெட் மாஸ்ட்டருக்கு என்னால தலைவலி; ஒருத்தன் ஃபெயில் ஆனாலும் 100 சதவிகித வெற்றின்னு விளம்பரம் பண்ண முடியாது. பள்ளியோட நல்ல பெயர் என் ஒருத்தன் கையில இருக்குன்னு நெனச்சு பெருமைப்படவும் முடியல.

நான் சிரிச்சுக்கிட்டே யோசிச்சேன். என்னவோ என் அப்பாவோட பெயருக்கு களங்கம் உண்டாக்கவே கஷ்ட்டப்பட்டு நான் ஃபெயில் ஆகற மாதிரி அப்பா நினைக்கிறார். ஆனந்த் மாமா வர்றது எனக்கு உற்சாகமா இருந்தது.

* * *

மாமா மினி பஸ்ல வந்து இறங்கினார். ஓடிப்போய் பையை வாங்கிட்டு வந்தேன். வீட்டுக்கு வர்ற வழியில ஜோக் அடிச்சுக்கிட்டே அவரு அட்வைஸ்களை ஆரம்பிச்சுட்டாரு. "பல்லகடிச்சுட்டு படி மூணு வருஷம் ஓடிப்போயிடும். அப்புறம் படி படின்னு சொல்ல ஆளே இருக்காது. பயப்படாதே, நானும் உன்ன மாதிரி இருந்து தான் இப்படி வந்திருக்கேன். கொஞ்சம் ப்ராக்டிக்கலா ஐடியாஸ் கொண்டு வந்திருக்கேன்."

"அப்பா சொல்ற மாதிரி நான் ஒண்ணும் வேணுக்கும்னே படிக்காம இல்ல."

"அப்புறமா அந்த பக்கத்து ஊரு கிரிக்கெட் மேட்ச் என்ன ஆச்சு?" மெதுவாக பேச்சை மாற்றிய மாமாவை எனக்கு ரொம்பவே பிடிச்சிருந்தது. பெரியவங்கள்லேயும் நம்மளைப் புரியறவங்க சில பேரு இருக்காங்களே!

மாடியில மாமாவோட பைய வச்சுட்டு அம்மா தந்த காஃபியக் குடுத்துட்டு மாமாவும் நானும் குளிக்கறதுக்காக ஆத்துக்கு புறப்பட்டோம். "பையனுக்கு கொஞ்சம் அட்வைஸ் பண்ணுங்க ஆனந்த். பத்தாம் க்ளாஸ் வந்தாச்சு கொஞ்சம் கூட அக்கரையில்ல இன்னும் கிரிக்கெட் ஃப்ரண்ட்ஸ்னு சுத்திக்கிட்டு இருக்கான்." அப்பா கச்சேரியை ஆரம்பிக்கவும், தனியே போய் ஏதோ பேசிவிட்டு வந்தார் மாமா. நான் பந்து, கிரிக்கெட் பேட், டவல், சோப் டப்பா சகிதம் சைக்கிளை தயார் செய்தேன். அப்பா என்ன சொன்னார்னு நானும் கேட்டுகலை மாமாவும் சொல்லிக்கலை. சனிக்கிழமை ஃப்ரெண்ட்ஸ் அதிகம் இருப்பாங்க. மாமாவும் ஆத்தாங்கரை கிர்க்கெட்ல சேந்துக்குவாரு.

கிரிக்கெட் ஆடிக் களைச்சுட்டோம். குளிச்சு முடிச்சு மருதமரத்துக்குக் கீழே மணல்ல உக்காந்து வழக்கம் போல கதையடிச்சுட்டு இருக்கறப்போ தான் மாமா சொன்னார், "நீ கிரிக்கெட்ல பெரிய ஆளா வரணும்னா கூட குறைஞ்ச பட்ச படிப்பையாவது முடிச்சிருக்கணும். எத்தனையோ திறமையானவங்க படிப்பு இல்லாததால மங்கிப் போயிருக்காங்க தெரியுமா?" நீ கிர்க்கெட்ல இந்த அளவு வர்றதுக்கு எத்தனை வருஷம் எவ்வளவு கஷ்ட்டப்பட்டு தினசரி விளையாடியிருக்கிறே அதே மாதிரி படிப்புலயும் முயற்சி எடுக்கணும். ஒடம்பு வலிச்சாலும் கண்டுக்காம ப்ராக்டிஸ் பண்ற மாதிரி பிடிக்காட்டி கூட பாடங்களப் படிச்சுத்தான் ஆகணும்.''

மாமா விளையாட்டு வீரங்களுக்கு கோச் பயிற்சி கொடுப்பது போல இருந்தது. "மாமா நானும் உங்கள மாதிரி வரணும்." னு சொன்னேன். மாமா உடனே அப்படியே பிடிச்சுக்கிட்டார். வீட்டுக்கு வந்ததும் சாப்பிட்ட கையோடேயே மாடிக்குப் போய் பெங்களூர்ல இருந்து வாங்கிட்டு வந்திருந்த ஒரு அழகான நோட்டையும் பேனாவையும் என் கையில குடுத்து என்ன எழுத வச்சார். என்னோட கனவுகள், பலம், பலவீனம்,

கேள்விகள், சந்தேகங்கள் அப்படின்னு என்னவெல்லாமோ எழுதச் சொன்னார். புரியலன்னு எதக் கேட்டாலும் சின்னச்சின்ன உதாரணங்கள் சொல்லி பொறுமையா விளக்கிட்டு கடைசியா பரிட்சைக்கு இன்னும் எத்தனை நாட்கள் இருக்குதுங்கறதையும் என்னோட பாடங்கள் எத்தனைங்கறதையும் கணக்குப்பண்ணி ஒரு டைம் டேபிள் போட்டுத் தந்தார். அதை மூணு காப்பி எடுத்து மாடிக்கதவுக்குப் பின்னால ஒண்ணு, அந்த பெங்களூர் நோட்டு பின் அட்டையில் ஒண்ணு ஒட்டிட்டு ஒண்ண அவரோட டயரியில் பத்திரமா வச்சிக்கிட்டார்.

"என்னோட அப்பா சொல்வாரு. தினசரி ஒரு மணி நேரம் படி. அப்படியும் உன்னால முடியலன்னா பரவாயில்லன்னு. நான் உண்மையா உக்காந்து படிச்சேன் புரியாதத கேட்டுப்படிச்சேன். கடவுள் புண்ணியத்துல சராசரி ஸ்டூடன்ட்டா இருந்தாலும் நல்ல நிலைமைக்கு வந்துருக்கேன். நீயும் எனக்கு ப்ராமிஸ் பண்ணித் தரணும். அடிக்கடி ஃபோன் பண்ணிக் கேட்பேன். சரியா ?"

மகுடி மாமா சொன்னதுக்கெல்லாம் படம் எடுத்த பாம்பா தலையாட்டிட்டே இருந்தேன். சொன்ன மாதிரியே அடிக்கடி ஃபோன் பண்ணி “எத்தனை பாடங்கள் முடிச்சே”ன்னு கேட்பார். “கடவுள் கிட்ட வேண்டிக்கிறேன்”னு சொல்வார். அப்பா இப்போ அதிகம் திட்டறதே இல்ல. நானும் டீச்சருங்க ஃப்ரண்ட்ஸ்ங்கன்னு கேட்டுப் படிச்சுட்டு இருக்கேன். கொஞ்சம் வித்தியாசம் தெரியத்தான் செய்யுது. கிரிக்கெட்ட கொஞ்சம் குறைச்சிருக்கேன். மாமா சொன்ன மாதிரி தினசரி காலைல டைம் டேபிளுக்கு முன்னால நின்னு கடவுள்ட்ட வேண்டிட்டுத் தான் படிக்க ஆரம்பிக்கிறேன்.

மாமா வந்துட்டுப்போய் ஒரு மாசம் ஆச்சு. நேத்து மந்த்லி டெஸ்ட் பேப்பர் தந்தாங்க. எந்த டீச்சருமே என்னிய திட்டல. ஏன்னு எனக்குப் புரியல. அப்படி ஒண்ணும் அதிக மார்க் வாங்கல நான். தலைமை ஆசிரியர் என்னத் தனியாக் கூப்பிட்டு “தினசரி சாயங்காலம் கொஞ்ச நேரம் இங்கேயே உக்காந்து படிக்கிறியா ?”ன்னு கேட்டார் நானும் சரின்னு சொல்லியிருக்கேன்.

மாமா லீவுல பெங்களூரு கூட்டிட்டுப் போய் பாட்டுக்கேக்கற எம்.பி த்ரீ ப்ளேயர் வாங்கித் தர்றேன்னு சொல்லியிருக்கார். ஒரு எம்.பி த்ரீ ப்ளேயர் படத்தையும் மாடிக்கதவுக்குப் பின்னால ஒட்டிவச்சிட்டுப்போயிருக்கார். இப்போ பரீட்சைக்கு எத்தனை நாள் இருக்குன்னு எண்ணிட்டு இருக்கேன். ஒரு பக்கம் பயமா இருந்தாலும் ஆனந்த் மாமா பெங்களூர், எம்.பி. த்ரீ ப்ளேயர் எல்லாம் கனவுல வருது.